# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1530/13 - 2008 ජනවාරි 01 වැනි අඟහරුවාදා - 2008.01.01

*1530/13 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியல் அமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2006, ஒக்டோபர் 05 ஆந் திகதிய 1465/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரிவுகளின் மூலம் ஆக்கப்பட்ட கட்டளை 2008.01.01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் பின்வருமாறு இத்தால் கட்டளையை ஆக்குகின்றேன்.

அட்டவணையின் 4 மற்றும் 10 ஆம் விடயங்களை நீக்குவதன் மூலம், பின்வரும் விடயங்கள் பதிலிடப்படுகின்றது :-

| | | |
|---|---|---|
| "4 (அ) | மதுபான விற்பனைக்கான வியாபாரம் அல்லது வர்த்தகம் தவிர்ந்த ஏதேனும் வியாபாரத்தை அல்லது வர்த்தகத்தை, உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலை வழங்கப்பட்ட உரிமமொன்றில் குறிப்பிட்ட காலத்திற்குக் கொண்டு நடாத்துவதற்கான ஏதேனும் உரிமப் பத்திரம். | ரூபா 1,000.00 அல்லது உரிமக் கட்டணத்தின் 10% இரண்டில் எது குறைவானதோ அத் தொகை |
| (ஆ) | மதுபான விற்பனைக்கான வியாபாரம் அல்லது வர்த்தகமொன்றினை வழங்கப்பட்ட உரிமமொன்றில் குறிப்பிட்ட காலத்திற்குக் கொண்டு நடாத்துவதற்கான ஏதேனும் உரிமப் பத்திரம். | ரூபா 10,000.00 |
| 10. | ஏதேனும் பணம் அல்லது ஆதனத்திற்காக வழங்கப்பட்ட ஏதேனும் பற்றுச்சீட்டு அல்லது விடுவிப்பு. | |
| (அ) | ரூபா 25,000.00 வரைக்கும் | விலக்களிப்பு |
| (ஆ) | ரூபா 25,000.00 இற்கு மேல் | ரூபா 25.00" |

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01.
2007.12.31.

1-494

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.